இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 03
LWU 1202 – ஒப்புரவு கொள்கைகள்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 23.03.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

பகுதி I இல் இருந்து ஒரு வினாவையும் பகுதி II இல் இருந்து நான்கு வினாக்களையும் தெரிந்தெடுத்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

(இப் பகுதியிலிருந்து ஒரு வினாவிற்கு விடை தருக)

1. "ஒரு பரந்தளவான எல்லைகள் கொண்ட தன்மதி அதிகாரம் வாய்ந்த ஒப்புரவு பரிகாரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வரையறுக்கப்பட்ட எல்லைகளை கொண்ட சட்ட பரிகாரங்களை முழுமைப்படுத்தியமையானது ஒப்புரவினுடைய பங்களிப்புகளுள் ஒன்றாகும்."

   Philip Pettit -Equity and The Law of Trusts 8th edition Page 38.

   விளக்குக.

2 "ஒப்புரவு முதுரைகள் ஒப்புரவு வளர்ச்சி மீது பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளது."

   விளக்குக.

## பகுதி II

(இப் பகுதியிலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை தருக)

3. (அ) நம்பிக்கை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 இனை விளக்குக.

   (ஆ) நம்பிக்கை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2 இனை நீக்கிவிட வேண்டும் என ஒரு குழு சிபார்சு செய்கிறது.

   இந்த சிபாரிசுடன் நீர் உடன்படுகிறீரா?
   உமது விடைக்குரிய காரணங்களை தருக.

4. (I) நம்பிக்கை கட்டளைச் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளுடன் தொடர்புறுத்தி வலிதான வெளிப்படையான நம்பிக்கை ஒன்றை தோற்றுவிப்பதற்குரிய தேவைப்பாடுகளை விளக்குக.

   (II) பர்ணாந்துடைய இறுதி விருப்பாவணத்தில் உள்ள பின்வரும் கையளிப்புகள் வலிதான நம்பிக்கை தோற்றுவிக்கின்றதா என்பதை ஆராய்க.

   (அ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சட்ட பிரிவிற்கு அனுமதி பெறும் என்னுடைய பேரப்பிள்ளைகளிடையே பங்கிடுமாறு ரூ 100,000/= ரோகினிக்கு;

(ஆ) என்னுடைய கல்லறையை பராமரிப்பதற்காக ரூ 200,000/= லங்காவுக்கு.

5. (அ) லால் ஜெனிவாவில் உள்ள சர்வதேச நிறுவனம் ஒன்றிலே தொழில் ஒன்றை மேற்கொண்டிருந்த போது தன்னுடைய சகோதரன் அருண் பெயரிலே இலங்கையில் நிலத்துண்டொன்றை வாங்கினான். லால் ஓய்வு பெற்ற பின்பு இலங்கைக்கு திரும்பி வந்ததுடன் அருணிடம் தன்னுடைய காணியை திருப்பி தருமாறு வேண்டினான்.ஆனால் அருண் அவ்வாறு செய்ய மறுத்தான்.

லால் இற்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) யசோ தன்னுடைய உயர் கல்விக்காக இங்கிலாந்து செல்ல தீர்மானித்து, தன்னுடைய தேயிலை தோட்டத்தை தனது நண்பி பிரியாவிற்கு பிரதிபயன் எதுவும் இன்றி கைமாற்றம் செய்தாள். யசோ இலங்கைக்கு திரும்பி வந்து தனது தோட்டத்தை மீள கைமாற்றுமாறு பிரியாவை வேண்டினாள். பிரியா அவ்வாறு செய்ய மறுத்தாள்.

யசோவிற்கு ஆலோசனை வழங்குக.

6. பந்துலவுடைய இறுதி விருப்பாவணத்தில் காணப்படும் பின்வரும் கையளிப்புகள் வலிதான தர்ம நம்பிக்கை ஒன்றை தோற்றுவிக்கின்றதா என ஆராய்க.

(அ) சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு புலமைபரிசில் வழங்குவதற்காக ரூ 900,000/= இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு;

(ஆ) நாய் பிரியர் அமைப்பிற்கு தெரு நாய்களுக்கு கிருமிநாசினிகளை அடிப்பதற்காக ரூ 300,000/=

(இ) கிரிகெட் விளையாட்டுப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்வதற்கு ஹட்டன் இளைஞர் கழகத்திற்கு ரூ 100,000/=

(ஈ) சுற்றாடல் பாதுகாப்பை முன்னேற்றுவதற்காக திறந்த பல்கலைக்கழக சுற்றாடல் அமைப்பிற்கு ரூ 500,000/=

7. வாஹிஷ் நம்பிக்கை ஒன்றை ஆக்கினான். காமினி, சமன் நம்பிக்கையாளரகள் ஆவர். பொல்வத்தை என அழைக்கப்படும் தென்னந்தோட்டம் நம்பிக்கை ஆதனம் ஆகும். தேயிலை தோட்டத்தில் இருந்து பெறப்படும் வருமானத்தில் இருந்து வாஹிஷ் உடைய பிள்ளைகளான பாமா வாமா இருவரையும் பராமரிக்குமாறு நம்பிக்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் பிள்ளைகள் வயது வந்ததுடன் தோட்டத்தை அவர்களுக்கு கைமாற்ற வேண்டும் எனவும் அவ் ஆவணம் நம்பிக்கையாளர்களை வேண்டியிருந்தது. காமினி, சமன் இருவரும் வருமானத்தில் அரைப்பகுதியை தமது சொந்த நன்மைக்காக பயன்படுத்தினர். அதன் பின்னர் காமினி தோட்டத்தில் அரைப்பகுதியை தன்னுடைய மகளான ரம்யாவுக்கு கைமாற்றம் செய்ததுடன், அவுஸ்திரேலியாவுக்கு சென்று விட்டான்.

பாமா, வாமா ஆகிய இருவருடைய உரிமைகள் தொடர்பாக அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

8. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு பற்றி குறிப்பு எழுதுக.

(அ) முன்னளித்தல் பற்றிய ஊகம்(Presumption of Advancement)

(ஆ) நம்பிக்கை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 90.

(இ) சை-பரே தத்துவம்(cey-pres doctorine)

(பதிப்புரிமையுடையது)